**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure)**
**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, TIRUMANGALAM**

**Case No:CC. 585/2022**

**Prosecution Witnesses : 1**

| | | | |
|---|---|---|---|
| Name | : விஜயலட்சுமி | Caste | : |
| Father Name | :க/பெ.பால்பாண்டி | Calling | : |
| Village | : | Religion | : |
| Taluk | : | Age | : |

(எதிரிகள் ஆஜர். எதிரிகள் தரப்பில் வழக்கறிஞர் ஆஜர்)
**(10.07.2025)**
**முதல் விசாரணை**

நான் தற்போது சிவரக்கோட்டையில் குடியிருந்து வருகிறேன், நான் கூலி வேலை செய்து வருகிறேன். ஆஜர் எதிரிகளை எனக்கு தெரியும். அவர்கள் முறையே எனது கணவர் பால்பாண்டி, எனது மாமியார் பாண்டியம்மாள் மற்றும் எனது நாத்தனார் கணவர் சங்குராஜ் ஆகியோர்கள் ஆவார்கள். எனக்கும் 1 வது எதிரி பால்பாண்டிக்கும் திருமணம் முடிந்து 16 வருடங்கள் முடிந்துவிட்டது. அந்த திருமணத்தின் வாயிலாக 2 ஆண்பிள்ளைகள் உள்ளனர். மூத்த பையன் 10வது வகுப்பும், 2 வது பையன் 7 வது வகுப்பு படித்துக்கொண்டிருக்கிறார்கள். எங்கள் திருமண வாழ்க்கையில் கடந்த 2017 வது வருடம் எனக்கும் எனது கணவருக்கும் நிறைய பிரச்சினை நடந்தது,. 2017 வது வருடம் ஜூன் மாதம் எனது மகன்களுக்கு பள்ளிக்கட்டணம் கட்டுவதற்காக எனது கணவரிடம் பணம் கேட்டேன். எனது கணவர் பணம் தரமுடியாது என்று சொல்லி என்னை என் அம்மா வீட்டிற்கு அனுப்பிவைத்துவிட்டார். எனவே நான் திருமங்கலம் அனைத்து மகளிர் காவல் நிலையத்தில் புகார் கொடுத்தேன். ஆய்வாளர் 1வது எதிரி கூப்பிட்டு விசாரித்து அறிவுரை சொல்லி பள்ளிக்கட்டணம் நீ தான் கட்ட வேண்டும் என சொல்லி அனுப்பினார்கள். எனவே நான் அந்த புகாரை திரும்ப

பெற்றுக்கொண்டேன். எனவே மீண்டும் குராயூரில் உள்ள எனது கணவர் வீட்டிற்கு சேர்ந்து வாழ்வதற்காக சென்றேன்,. அதன் பின்பும் எனக்கும் எனது கணவருக்கும் தினமும் சண்டை நடந்து கொண்டே இருந்தது, காவல் நிலையம் சென்று என்னை அசிங்கபடுத்திவிட்டாய் என சொல்லி என்னை கெட்ட வார்த்தையால் திட்டினார். எனது பிள்ளைக்காக அதை நான் பொறுத்துக்கொண்டு எனது கணவர் வீட்டில் இருந்தேன். அதே வருடம் ஜூலை மாதம் எங்களது பக்கத்து வீட்டைச் சார்ந்த ஜோதிமலர் என்பவரிடம் நானும் எனது கணவரும் சேர்ந்து ஏற்கனவே ரூ.10,000/- கடன் வாங்கியிருந்தோம். ஜோதிமலர் என்னிடம் பணத்தை கொடுத்தார். ஜோதிமலர் திரும்ப பணத்தை ஜூலை மாதம் 2017 ஆம் ஆண்டு கேட்ட போது எனது கணவர் நீ தான் பணத்தை வாங்கினாய் என சொல்லி என்னை திட்டி உன் அப்பா வீட்டு சொத்தை விற்று பணத்தை திரும்ப கொடு என சொல்லி என்னை திட்டி அடித்து சண்டைபோட்டார். அப்போது எனது மாமியார் அங்கு வந்து எதற்கு இவளை இப்படியே விட்டு வைச்சிருக்க இவளை அடித்துக்கொல் என சொல்லி எனது கணவர் கொத்தனார் கரண்டியால் என்னை உடம்பு முழுவதும் அடித்து எனக்கு உடல்முழுவதும் காயம் ஏற்பட்டது. அப்போது எதிரி சங்குராஜாவும் என்னை அடித்தார். சண்டை நடந்த போது மதியம் 11.30 மணி இருக்கும் என்னால் வலி தாங்க முடியாமல் என பெற்றோர்களுக்கு போனில் தகவல் சொன்னேன். எனது பெற்றோர்கள் உடனே கிளம்பி வந்து சண்டையை விலக்கிவிட்டு என்னை திருமங்கலம் அரசு மருத்துவமனைக்கு அழைத்து சென்றார்கள். அங்கு சுமார் 6 நாட்கள் உள்நோயாளியாக சிகிச்சையில் இருந்தேன். நான் அங்கு சிகிச்சையில் இருந்த 6 நாட்களும் எனது கணவரோ எனது கணவர் வீட்டாரோ யாரும் வந்து என்னை பார்க்கவில்லை. எனவே நாள் திருமங்கலம் அனைத்து மகளிர் காவல் நிலையத்தில் ச ம்பவம் பற்றி புகார் கொடுத்தேன். என்னிடம் காண்பிக்கப்படும் புகார் நான் கொடுத்தது தான். புகாரில் உள்ள கையெழுத்தும் என்னுடையது தான். மேற்படி புகார் அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது. போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

எனது கணவருக்கு சொந்த ஊர் குராயூர். நான் பிறந்த ஊர் சிவரக்கோட்டை ஆகும். கடந்த 16 ஆண்டுகளில் 6 ஆண்டுகள் எனது கணவர் ஊரிலும் மீதம் ஆண்டுகள் எனது ஊரிலும் குடியிருந்து வந்தோம். நான் தற்போது மதுரையில் குடியிருந்து வருகிறோம் என்று சொன்னால் சரியல்ல. எனது கணவர் எனது தாயார் வீட்டில் 6 ஆண்டுகள் தவிர மீதி உள்ள ஆண்டுகளில் 2, 3 ஆண்டுகளில் எனது தாயார் வீட்டில் வசித்து வந்தார். எனது கணவர் கொத்தனார் வேலை பார்க்கிறார் என்றால் சரிதான். எனது கணவர் வீட்டில் ஆடு மாடுகள் கிடையாது, வயல்வெளி சென்று வேலை பார்க்கும் அவசியம் இல்லை. எனக்கும் எனது கணவருக்கும் இருக்கும் பிரச்சினை பணப்பிரச்சினை மட்டுமா என்றால் இல்லை. அவர் தினமும் குடித்துவிட்டு வந்து அடிப்பார். சிவரக்கோட்டையில் 3 ஆண்டுகள் வாழ்ந்துவிட்டு மறுபடியும் எனது கணவர் வீட்டிற்கு சென்ற போது நாங்கள் புதுவீடு கட்டி தான் அங்கு சென்றோம் என்றால் சரிதான். எனது மாமியாரும், ஆஜர் 3 வது எதிரியும் பக்கத்து வீட்டில் வசித்து வருகிறார் என்றால் சரிதான். சம்பவம் கடந்த 2017வது வருடம் ஜோதிமலர் என்பவரிடம் நான் பணம் வாங்கியது சம்பந்தமாக மட்டும் தான் பிரச்சினை என்றால் நானும் எனது கணவரும் தான் சேர்ந்துவாங்கினோம். நான் எனது கணவருக்கு தெரியாமல் பல நபரிடம் கடன் பெற்றதால் பிரச்சினை என்றால் சரியல்ல. புதியதாக கட்டிய வீடு படி உயரமாக உள்ளது என்றால் சரிதான். எனது கணவர் காலை வேலைக்கு சென்றுவிட்டு மாலை தான் வீடு திரும்புவார். சம்பவத்தன்று நான் படியில் இருந்து கீழே விழுந்து தான் காயம் ஏற்பட்டது என்றால் சரியல்ல. எனது கணவர் தான் அடித்து காயம் ஏற்படுத்தினார். எனது கணவர் மற்றும் 3ம் எதிரி சம்பவதினத்தில் அங்கு கிடையாது என்றாலும் வேலைக்கு சென்றுவிட்டார்கள் என்றுசொன்னால் சரியல்ல. நான் கள்ளிக்குடி காவல் நிலையத்தை கடந்து தான் திருமங்கலத்திற்கு வரவேண்டும் என்றால் சரிதான். நாங்கள் வரும் போது காவல் நிலையத்தில் புகார் கொடுக்கவில்லை என்று சொன்னால் சரியல்ல. ஏற்கனவே நான் சம்பவத்திற்கு முன் 3 மாதத்திற்கு முன்பு கொடுத்த புகார் மனுவை திரும்பவும் கொடுத்தேனா என்றால் இல்லை. புதிதாக ஜோதிமலர் என்பவரிடம் பணம் கொடுக்கல் வாங்கல் சம்பந்தமாகவும் கொடுத்தேன். இரண்டு புகார்கள் சம்பந்தமாக

என்னை விசாரித்து வழக்கு பதிவு செய்யப்பட்டது என்று சொன்னால் நாங்கள் காவல் கண்காணிப்பாளரிடம் மேல் முறையீடு செய்த பிறகு தான் வழக்கு பதிவு செய்தார்கள். நாங்கள் காவல் கண்காணிப்பாளர் மதுரை அவர்களிடம் கொடுத்த புகார் மனுவும் விசாரணைக்கு வந்த அதன் பேரில் வழக்கு பதிவு செய்யப்பட்டது. காவல் நிலையத்தில் இருந்து மருத்துவமனைக்கு வந்து போலிசார் என்னிடம் நான் கைப்பட எழுதிக்கொடுத்த புகார் மனுவை பெற்று சென்றார்கள். நான் எழுதிக்கொடுத்த புகாரில் அடித்தல் திருத்தல் சேர்த்தல் இருந்ததா என்றால் எனக்கு ஞாபகம் இல்லை. நான் கொடுத்த புகாரில் தேதி எதுவும் குறிப்பிடவில்லை என்றால் சரிதான். நான் மருத்துவமனையில் வைத்து எழுதிக்கொடுத்தது. நான் மருத்துவமனையில் புகார் கொடுத்தற்கு பின்பு காவல் ஆய்வாளர் என்னை விசாரிக்கவில்லை என்றால் சரிதான். மருத்துவமனையில் புகார் கொடுத்ததற்கு பின்பு நேராக நான் நீதிமன்றத்தில் தான் சாட்சிய ம் அளிக்கிறேன் என்றால் சரிதான். இதற்கு இடைப்பட்ட காலத்தில் நான் காவல் நிலையம் செல்லவில்லை. போலிசார் என்னை விசாரிக்கவில்லை. நான் தான் தடுமாறி படியில் இருந்து கீழே விழுந்து காயம் ஏற்பட்டது என்று சொன்னாலும் எதிரிகளுக்கும் இந்த வழக்கும் எவ்வித சம்பந்தம் இல்லை என்று சொன்னாலும் நான் 1வது எதிரியிடம் சேர்ந்து வாழ பிடிக்காமல் எதிரிகள் மீது நான் பொய்யாக வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்று சொன்னால் சரியல்ல.

**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure)**
**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, TIRUMANGALAM**

**Case No:CC. 585/2022**

**Prosecution Witnesses : 2**

| | | | |
|---|---|---|---|
| Name | : பாண்டியம்மாள் | Caste | : |
| Father Name | :க/பெ.ஆறுமுகம் | Calling | : |

Village : Religion :

Taluk : Age :

(எதிரிகள் ஆஜர். எதிரிகள் தரப்பில் வழக்கறிஞர் ஆஜர்)

**(10.07.2025)**

**முதல் விசாரணை**

நான் தற்போது சிவரக்கோட்டையில் குடியிருந்து வருகிறேன். நான் கூலி வேலை செய்து வருகிறேன். அ.சா.1 எனது மகள் ஆவார். 1வது எதிரி எனது மருமகன் ஆவார். எதிரி பாண்டியம்மாள் எனது சம்மந்தி ஆவார். 3 வது எதிரி எனது மகளின் நாத்தனார் கணவர் ஆவார். கடந்த 2009 வது வருடம் எனது மகளுக்கு 1 வது எதிரியுடன் திருமணம் நடைபெற்றது. இந்த வழக்கு சம்பவம் நடைபெற்று 8 வருடங்கள் ஆகிறது. கடந்த 16.07.2017 வது வருடம் சண்டை நடந்தது என எனது மகள் அ.சா.1 எங்களுக்கு போன் செய்தார். எனது மகளின் கணவர் மற்றும் கணவரின் அம்மா ஆகியோர்கள் சேர்ந்து எனது மகளுடன் சண்டை போட்டதாக எனது மகள் கூறினார். நாங்கள் சென்று குராயூரில் உள்ள என் மகள் ஆஜர் எதிரியுடன் இருந்த வீட்டிற்கு சென்று என் மகளை பார்த்த போது கால்களில் காயத்துடன் எனது மகள் நடக்கமுடியாமல் இருந்தார். நானும் எனது கணவரும் எனது மகளை திருமங்கலம் அரசு மருத்துவமனையில் சிகிச்சைக்காக சேர்த்தோம். 1 வது எதிரி கொத்தனார் கரண்டியால் என் மகள் மீது எறிந்ததில் எனது மகளுக்கு வயிறு வலிப்பதாக கூறினார். மேற்படி மருத்துவமனையில் எனது மகள் 1 வாரம் சிகிச்சையில் இருந்தார். போலிசார் சம்பவம் பற்றி விசாரித்தார்கள்.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

சிவரக்கோட்டைக்கும் குராயூருக்கும் சுமார் 10 கி.மீ இருக்கும். குராயூரிலிருந்து திருமங்கலம் வரவேண்டும் என்றால் சிவரக்கோட்டையை கடந்து தான் வரவேண்டும். இடையில் கள்ளிக்குடி காவல் நிலையம் மற்றும் அரசு மருத்துவமனை உள்ளது என்றால் சரிதான். சம்பவம் பற்றி எனது மகள் போனில் சொல்லி தான் தெரியும். நேரடியாக தெரியாது. எனது மகள் காயம் பட்டதை திருமங்கலம் அரசு மருத்துவமனையில் தான் பார்த்தேன். எனது மகள் நைட்டி டிரஸ் போட்டிருந்ததால் வீட்டில் வைத்து பார்க்கவில்லை. 16.07.2017ம் தேதி பிரச்சினை சம்பந்தமாக காவல் நிலையத்தில் புகார் கொடுத்துவிட்டோம். மகளிடம் தான் மருத்துவமனையில் வைத்து போலிசார்

விசாரித்தார்கள். என் மகளிடம் தான் எழுதி வாங்கினார்கள். போலிசார் என்னிடமும் விசாரித்தார்கள். அதன் பிறகு நாங்கள் காவல் நிலையம் செல்லவில்லை. போலிசார் விசாரிக்கவில்லை. எதிரிகளுக்கும் இந்த வழக்கும் எவ்வித சம்பந்தம் இல்லை என்று சொன்னால் சரியல்ல.

**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure)**
**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, TIRUMANGALAM**

**Case No:CC. 585/2022**

**Prosecution Witnesses : 3**

| | | | |
|---|---|---|---|
| Name | : ஆறுமுகம் | Caste | : |
| Father Name | : ராஜகோபால் | Calling | : |
| Village | : | Religion | : |
| Taluk | : | Age | : |

(எதிரிகள் ஆஜர். எதிரிகள் தரப்பில் வழக்கறிஞர் ஆஜர்)
**(10.07.2025)**
**முதல் விசாரணை**

நான் தற்போது சிவரக்கோட்டையில் குடியிருந்து வருகிறேன். நான் நிமிந்தாள் பணி செய்து வருகிறேன். அ.சா.1 எனது மகள் ஆவார். அ.சா.2 எனது மனைவி ஆவார். 1வது எதிரி எனது மருமகன் ஆவார். எதிரி பாண்டியம்மாள் எனது சம்மந்தி ஆவார். 3 வது எதிரி எனது மகளின் நாத்தனார் கணவர் ஆவார். 1வது எதிரிக்கும் எனது மகளுக்கும் சுமார் 16 வருடங்களுக்கு முன்பு திருமணம் நடைபெற்றது. கடந்த 16.07.2017 அன்று மதியம் 1 மணியளவில் எனது மகள் அ.சா.1 எனக்குபோன் செய்து ஆஜர் எதிரிகளுக்கும் எனது மகளுக்கும் சகண்டை நடந்தது என கூறினார். இதற்கு முன்பு நாங்கள் 2 முறை சண்டை நடந்துள்ளது. நான் சமாதானம் செய்து எனது மகளை அவரது கணவர் வீட்டிற்கு அனுப்பி வைத்தேன். மேற்சொன்ன தேதியில் பள்ளிக்கூடத்தில் பிள்ளைகளை சேர்ப்பதற்காக பணம் சம்பந்தமாக சண்டை நடந்துள்ளது. நானும் எனது மனைவியும் சென்று எனது மகள் வீட்டிற்கு சென்று பார்த்த போது என் மகளுக்கு உடம்பு முழுவதும் ஆங்காங்கே காயங்கள் இருந்தது. நான் எனது மகளை ஆட்டோவில் திருமங்கலம் அரசு மருத்துவமனைக்கு அழைத்து வந்தேன்.

அங்கு எனது மகள் 1 வாரம் சிகிச்சையில் இருந்தார். போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

எனது மகள் எனக்கு 2 மணிக்கு போன் செய்த பிறகு தான் விபரம் தெரியும். சம்பவம் பற்றி நேரடியாக தெரியாது. நாங்கள் போன் செய்த பிறகு நேடியாக திருமங்கலம் அரசு மருத்துவமனையில் தான் பார்த்தோம் என்றால் இல்லை. நாங்கள் குராயூர் சென்று பார்த்தோம். நாங்கள் குராயூரில் இருந்து திருமங்கலத்திற்கு வரும்போது இடையில் கள்ளிக்குடி காவல் நிலையம் மற்றும் மருத்துவமனை உள்ளது என்றால் சரிதான். அன்றே போலிசார் வந்து எனது மகளிடம் விசாரித்து புகார் பெற்றுக்கொண்டார்கள் என்றால் சரிதான். என்னிடட்ம போலிசார் விசாரித்து வாக்குமூலம் பெற்றார்களா என்றால் சரியல்ல. எனது மகள் தான் தடுமாறி படியில் இருந்து கீழே விழுந்து காயம் ஏற்பட்டது என்று சொன்னாலும் எதிரிகளுக்கும் இந்த வழக்கும் எவ்வித சம்பந்தம் இல்லை என்று சொன்னால் சரியல்ல. என் மகள் தான் எதிரியுடன் சேர்ந்து வாழபிடிக்காமல் எதிரி மீது பொய் வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்று சொன்னால் சரியல்ல.